www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 12
## (பொது அறிவு)

1. ராணா பிரதாப் சாகர் அணுக்கரு ஆற்றல் உலை உள்ள மாநிலம்
அ) மகாராஷ்டிரா ஆ) தமிழ்நாடு
இ) ராஜஸ்தான் ஈ) கர்நாடகா

2. எக்ஸ் கதிர்களின் அலைநீளம்
அ) 1 A° முதல் 1000 A° வரை ஆ) 1 A° முதல் 100 A° வரை
இ) 100 A° முதல் 1000 A° வரை ஈ) 100 A° முதல் 10,000 A° வரை

3. மின் தடை R = ?
அ) $\frac{V}{I}$ ஆ) $\frac{I}{V}$
இ) $I^2P$ ஈ) $\frac{W}{t}$

4. இரு அடுத்தடுத்த முகடுகள் அல்லது அகடுகளுக்கு இடையே உள்ள தொலைவு
அ) அதிர்வெண் ஆ) அலைநீளம்
இ) அலைவேகம் ஈ) மீயொலி அலை

5. சூடேற்றப்பட்ட டங்ஸ்டன் ஒரு நல்ல
அ) புற ஊதாக் கதிர் மூலம் ஆ) காமாக் கதிர் மூலம்
இ) ரேடியோ அலை மூலம் ஈ) அகச்சிவப்புக் கதிர் மூலம்

6. நீள் விரிவெண் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
அ) $\alpha$ ஆ) $\beta$
இ) 8 ஈ) $\mu$

7. ஒரு பொருளின் மீதுள்ள அழுத்தத்தை அதிகரித்தால் அதன் உருகுநிலை
அ) மாறாது ஆ) அதிகரிக்கிறது
இ) குறைகிறது ஈ) இரு மடங்காகிறது

8. $\beta$ சிதைவின் போது
அ) அணு எண் ஒன்று குறையும்
ஆ) நிறை எண் ஒன்று குறையும்
இ) அணு எண் ஒன்று அதிகரிக்கும்
ஈ) நியூட்ரான் எண்ணிக்கை ஒன்று குறையும்

9. 'சிறுபஞ்சமூலம்' என்ற நூலின் ஆசிரியர்
அ) நல்லாதனார் ஆ) காரியாசான்
இ) பூதஞ்சேந்தனார் ஈ) கணிமேதாவியார்

10. 'வீரசோழியம்' என்ற நூலின் ஆசிரியர்
அ) புத்தமித்திரர் ஆ) குணவீரபண்டிதர்
இ) பவநந்தி முனிவர் ஈ) அமிர்தசாகரர்

11. 'பசுவய்யா' என்ற புனைப்பெயரால் அறியப்படுபவர்
அ) ஜெயமோகன் ஆ) ஜெயகாந்தன்
இ) கல்கி ஈ) சுந்தர ராமசாமி

12. ஒரு மிகை முழுவை ஒரு குறை முழுவால் வகுக்கக் கிடைப்பது
அ) ஒரு மிகை எண் ஆ) ஒரு குறை எண்
இ) ஒரு விகிதமுறு எண் ஈ) ஒரு தசம எண்

13. முதல் 40 இயல் எண்களின் கூட்டுப்பலன் என்ன?
அ) 160 ஆ) 640
இ) 820 ஈ) 1200

14. $\frac{4}{7}, \frac{1}{3}, \frac{5}{11}$ மற்றும் $^2/_{11}$ ஆகிய பின்னங்களில் சிறியது எது?
அ) $\frac{4}{7}$ ஆ) $\frac{1}{3}$
இ) $\frac{5}{11}$ ஈ) $^2/_{11}$

15. இரண்டு எண்களின் மீ.சி.ம. 72 ஆகும். அதன் மீ.பொ.வ. 12ஆக இருந்து ஒரு எண் 24 எனில் மற்றொரு எண் என்ன?
அ) 48 ஆ) 18
இ) 30 ஈ) 36

16. ஒரு வேலையை 7 நாட்களில் 20 ஆட்கள் செய்து முடிப்பர். அதே 20 ஆட்கள் மூன்று பங்கு வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?
அ) 21 நாட்கள் ஆ) 25 நாட்கள்
இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்

17. மூன்று மாடுகளின் சராசரி விலை ரூ. 15,000 அவற்றின் விலையின் விகிதம் 3:5:7 எனில் குறைந்த மாடு விலை என்ன?
அ) ₹9,000 ஆ) ₹10,000
இ) ₹15,000 ஈ) ₹20,000

18. மூன்று எண்களின் சராசரி 30. இரு எண்கள் முறையே 27, 32 எனில், அந்த மூன்றாவது எண் என்ன?
அ) 30 ஆ) 31
இ) 32 ஈ) 33

19. ஒருவர் ₹40,000ஐ 12% தனிவட்டிக்கு 2 ஆண்டுகளுக்குக் கடனாக வாங்கினார் எனில், அவர் கொடுக்கும் வட்டி எவ்வளவு?
அ) ₹9,500 ஆ) ₹9,800
இ) ₹9,600 ஈ) ₹9,900

20. 6 செ.மீ. ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ. தொலைவிலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட தொடுகோட்டின் நீளம் எவ்வளவு?
அ) 3 செ.மீ. ஆ) 4 செ.மீ.
இ) 6 செ.மீ. ஈ) 8 செ.மீ.

21. பாஸ்பரஸ் பெண்டா குளோரைடில் உள்ள மூலக்கூறு வடிவமைப்பு
அ) முக்கோண தளம் ஆ) முக்கோண இரு பிரமிடு
இ) நான்முகி ஈ) எண்முகி

22. ஆவி அழுத்தத்திற்கும் அதன் செறிவுக்கும் இடையே உள்ள தொடர்பை வருவித்தவர்
அ) ரவுல்ட் ஆ) பெக்மன்
இ) ஆஸ்வால்ட் ஈ) வாக்கர்

23. பனிக்கட்டி உருகும்போது குறிப்பிட்ட அளவு வெப்பம்?
அ) உமிழப்படுகிறது
ஆ) உறிஞ்சப்படுகிறது

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

இ) சிறிது உமிழப்படுகிறது சிறிது உறிஞ்சப்படுகிறது
ஈ) உமிழப்படுவதுமில்லை உறிஞ்சப்படுவதுமில்லை

24. கீழ்க்கண்டவற்றில் எது சுய சகப்பிணைப்பு ஆற்றல் மிக அதிகம் கொண்டது?
அ) கார்பன் ஆ) சிலிக்கான்
இ) நைட்ரஜன் ஈ) ஆக்ஸிஜன்

25. கரிமச் சேர்மங்களைப் பெயரிடுவதற்கு முறைப்படுத்திய அடிப்படை மற்றும் பயன்சார்ந்த வேதியியலின் பன்னாட்டு சங்கம் (IUPAC) எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1987 ஆ) 1990
இ) 1993 ஈ) 1997

26. ஒரு ஃபோட்டானிற்கு
அ) ஆற்றல், நிறை இரண்டுமே சுழி
ஆ) ஆற்றல், நிறை இரண்டுமே முடிவிலி
இ) ஆற்றல் சுழி ஆனால் நிறை உண்டு
ஈ) ஆற்றல் உண்டு ஆனால் நிறை சுழி

27. வெள்ளி நாணயத்திலிருந்து கிடைக்கும் வெள்ளியைத் தூய்மையாக்க சேர்க்கப்படுவது
அ) சில்வர் நைட்ரேட் ஆ) ஹைபோ
இ) சல்ஃப்யூரிக் அமிலம் ஈ) போராக்ஸ்

28. மிர்பேன் எண்ணெய் என்பது
அ) மெத்தில் சாலிசிலேட் ஆ) ஆஸ்பிரின்
இ) நைட்ரோ பென்சீன் ஈ) பென்சால்டிஹைடு

29. நீர்-நில வாழ்வன - ஊர்வன இனங்களின் இடை உயிரி
அ) சிமூரியா ஆ) டைனோசர்
இ) ஆர்க்கியாப்டெரிக்ஸ் ஈ) ஹைரகோத்தீரியம்

30. முதல் முதுகெலும்புகளின் தொகுப்பு
அ) நீர் நில வாழ்விகள் ஆ) ஏனேத்தா
இ) கார்னேட்டா ஈ) பறவையினம்

31. மீனின் கல்லீரலில் உள்ள வைட்டமின்
அ) வைட்டமின் A ஆ) வைட்டமின் D
இ) வைட்டமின் A மற்றும் D ஈ) வைட்டமின் K

32. சின்னத்தேனீ என்றழைக்கப்படும் தேனீ
அ) ஏபிஸ் டார்செட்டா ஆ) ஏபிஸ் இண்டிகா
இ) ஏபிஸ் அமெரிக்கானா ஈ) ஏபிஸ் ஃப்ளோரா

33. கண்ணின் வெண்படலம்
அ) கார்னியா ஆ) ஐரிஸ்
இ) ஸ்கிளிரா ஈ) ப்யூப்பில்

34. மனிதனின் பின் கடைவாய்ப் பற்கள் மொத்தம் எத்தனை?
அ) 4 ஆ) 8
இ) 12 ஈ) 16

35. 'கேன்சர்' என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள்
அ) புற்று ஆ) நண்டு
இ) புற்றுக்கட்டி ஈ) புற்றுநோய்

36. பழப்பூச்சியில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை
அ) 44 ஆ) 36
இ) 16 ஈ) 8

37. உட்கரு சூழ் அடர் உறுப்புகள் என்று முதலில் அழைக்கப்பட்டவை
அ) லைசோசோம்கள் ஆ) ரிபோசோம்கள்
இ) கோல்கை உறுப்புகள் ஈ) மைட்டோகாண்டிரியா

38. 'நஜா நஜா' என்ற அறிவியல் பெயர் எந்த விலங்கினத்தைக் குறிக்கிறது?
அ) பூனை ஆ) நல்ல பாம்பு
இ) எலி ஈ) கழுதை

39. மரபு வழி வகைப்பாட்டின் வல்லுநர்
அ) பெந்தம் ஆ) ஹூக்கர்
இ) அடால்ப் ஏங்ளர் ஈ) கார்ல் லின்னேயஸ்

40. 'உயிரியல் சொர்க்கம்' என்று அழைக்கப்படும் பகுதி
அ) நந்தா தேவி ஆ) அந்தமான் நிகோபார்
இ) மன்னார் வளைகுடா ஈ) நீலகிரி

41. நேர்ப்புவி நாட்டம் எதனால் தூண்டப்படுகிறது?
அ) எத்திலீன், அப்சிசிக் அமிலம்
ஆ) எத்திலீன், ஆக்ஸின்
இ) ஆக்ஸின், ஜிப்ரலின்
ஈ) ஆக்ஸின், அப்சிசிக் அமிலம்

42. $4x+2y=c$ என்ற $y^2=16x$ என்ற பரவளையத்தின் தொடுகோட்டில் Cஇன் மதிப்பு
அ) 2 ஆ) -2
இ) 4 ஈ) -4

43. ஆண்களுக்கான கருத்தடை முறை
அ) கருத்தடை மாத்திரை ஆ) ட்யூபெக்டோமி
இ) வாஸெக்டோமி ஈ) காப்பர் டி

44. எந்த பந்து வீச்சாளரின் பந்தை எதிர்கொண்டது தனக்கு மிகவும் சவாலாக இருந்தது என்று சச்சின் கூறியுள்ளார்?
அ) ஷேன் வார்ன் ஆ) ஹேன்ஸி குரோன்யே
இ) ஆலன் டொனால்டு ஈ) வாசிம் அக்ரம்

45. உலக பில்லியர்ட்ஸ் பட்டம் வென்ற முதல் இந்தியர்
அ) பங்கஜ் அத்வானி ஆ) பீட்டர் கில்கிறிஸ்ட்
இ) துருவ் சித்வாலா ஈ) கீத் சேத்தி

46. ஏர் இந்தியாவுக்குச் சொந்தமான கனிஷ்கா விமான விபத்து நடைபெற்ற ஆண்டு
அ) 1976 ஆ) 1982
இ) 1985 ஈ) 1989

47. சமீபத்தில் நடைபெற்ற 17ஆவது ஆசியான் மாநாடு எங்கு நடைபெற்றது?
அ) ஹனோய் ஆ) மணிலா
இ) ஃப்னாம் பென் ஈ) டோக்யோ

48. தனியார் பள்ளிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவின் புதிய தலைவர்
அ) நீதிபதி கோவிந்தராஜன் ஆ) நீதிபதி ரவீந்திர சச்சார்
இ) நீதிபதி ரவிராஜ பாண்டியன் ஈ) நீதிபதி அகர்வால்

49. சமீபத்தில் தன் பதவியை ராஜினாமா செய்த மாநில முதல்வர்
அ) அசோக் சவான் ஆ) நிதீஷ் குமார்
இ) ஷீலா தீக்ஷித் ஈ) உமர் அப்துல்லா

50. அகாடெமி ஆஃப் மோஷன் பிக்சர்ஸ் ஆர்ட்ஸ் அண்டு சயின்ஸ் என்பது எதைக் குறிக்கிறது?
அ) நோபல் விருது ஆ) கிராமி விருது
இ) ஆஸ்கர் விருது ஈ) செவாலியே விருது

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

51. ஒலிம்பிக்ஸில் இந்தியாவுக்கு முதல் தனிநபர் பதக்கம் பெற்றுத்தந்தவர்
அ) அபிநவ் பிந்த்ரா ஆ) கே.டி.ஜாதவ்
இ) கர்ணம் மல்லேஸ்வரி ஈ) லியாண்டர் பயஸ்

52. விமானங்கள் பறக்கும் காற்று மண்டலப்பகுதி
அ) அயனோஸ்பியர் ஆ) ட்ரோபோஸ்பியர்
இ) ஸ்ட்ரேடோஸ்பியர் ஈ) மீசோஸ்பியர்

53. மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி
அ) ரீட்டா ஃபாரியா ஆ) ஐஸ்வர்யா ராய்
இ) லாரா தத்தா ஈ) சுஷ்மிதா சென்

54. 'தீனபந்து' என்று அழைக்கப்பட்டவர்
அ) சி.எஃப்.ஆண்ட்ரூஸ் ஆ) சி.ஆர்.தாஸ்
இ) ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஈ) மோதிலால் நேரு

55. இந்தியாவில் மிக அதிக சதவிகிதம் வனப்பரப்பு பெற்றுள்ள மாநிலம்
அ) மத்தியப் பிரதேசம் ஆ) அருணாச்சலப் பிரதேசம்
இ) அஸ்ஸாம் ஈ) அந்தமான் நிக்கோபார்

56. 'இரண்டாம் அலெக்ஸாண்டர்' என்று அழைக்கப்பட்ட பேரரசர்
அ) அசோகர் ஆ) கனிஷ்கர்
இ) அலாவுதீன் கில்ஜி ஈ) அக்பர்

57. 'தமிழ் ஒடிஸி' என்று அழைக்கப்படும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) கலிங்கத்துப் பரணி

58. முதலாம் தரைன் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?
அ) 1098 ஆ) 1128
இ) 1181 ஈ) 1191

59. முழுக்க முழுக்க மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தைப் பயன்படுத்தி தேர்தல் நடத்தப்பட்ட முதல் மாநிலம்
அ) கோவா ஆ) கேரளா
இ) தமிழ்நாடு ஈ) மகாராஷ்டிரா

60. Long Walk to Freedom என்ற நூலின் ஆசிரியர்
அ) மகாத்மா காந்தி ஆ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்
இ) நெல்சன் மண்டேலா ஈ) சேகுவேரா

61. தமிழ்க் காலண்டர் எதை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது?
அ) சந்திரன் ஆ) சூரியன்
இ) கோள்கள் ஈ) பெருங்கடல்

62. புலிட்சர் விருது எந்த நாட்டினால் வழங்கப்படுகிறது?
அ) இங்கிலாந்து ஆ) ரஷ்யா
இ) அமெரிக்கா ஈ) பிரான்ஸ்

63. APEC அமைப்பின் தலைமையிடம் உள்ள நாடு
அ) பிலிப்பைன்ஸ் ஆ) தாய்லாந்து
இ) இந்தோனேஷியா ஈ) சிங்கப்பூர்

64. ஐக்கிய நாடுகள் அமைப்பில் இந்தியா உறுப்பினரான ஆண்டு மற்றும் நாள்
அ) 1945 அக்டோபர் 23 ஆ) 1945 அக்டோபர் 24
இ) 1945 அக்டோபர் 30 ஈ) 1948 அக்டோபர் 24

65. சீன வரலாற்றில் The Long March எனப்படும் நெடிய பயணத்தை நடத்தி பெரு வெற்றி பெற்ற தலைவர்
அ) டாக்டர் சன்யாட்சென் ஆ) சியாங் கேஷேக்
இ) மாசேதுங் ஈ) எவரும் இல்லை

66. லோரிங்கோ மாங்குரோவ் காடுகள் உள்ள மாநிலம்
அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) ஒரிஸ்ஸா
இ) குஜராத் ஈ) மேற்கு வங்காளம்

67. திபெத்தில் 'ஸாங்போ' என்று அறியப்படும் நதி
அ) கங்கை ஆ) பிரம்மபுத்திரா
இ) யமுனை ஈ) சட்லெஜ்

68. கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மிக உயர்ந்த சிகரம்
அ) ஆனைமுடி ஆ) தவளகிரி
இ) மகேந்திர கிரி ஈ) தங்கபர்வதம்

69. இந்தியத் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றம் செய்யப்பட்டபோது இந்தியாவின் வைஸ்ராயாக இருந்தவர்
அ) கர்சன் பிரபு ஆ) ஹார்டிஞ்ச் பிரபு
இ) செம்ஸ்போர்டு பிரபு ஈ) வேவல் பிரபு

70. இந்தியாவில் டேனியர்களின் தலைமையகம்
அ) கல்கத்தா ஆ) கோவா
இ) சீராம்பூர் ஈ) பரங்கிப்பேட்டை

71. 'ஆலம்கீர்' என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறிய முகலாயப் பேரரசர்
அ) ஔரங்கசீப் ஆ) ஷாஜஹான்
இ) அக்பர் ஈ) ஜஹாங்கீர்

72. தலைக்கோட்டைப் போர் நடைபெற்ற ஆண்டு
அ) 1552 ஆ) 1560
இ) 1565 ஈ) 1568

73. நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர்
அ) சர்.சி.வி.ராமன் ஆ) சந்திரசேகர்
இ) ராஜாஜி ஈ) டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

74. போலோ விளையாடிக் கொண்டிருந்தபோது குதிரையிலிருந்து கீழே விழுந்து மரணமடைந்த மன்னர்
அ) குத்புதீன் ஐபெக் ஆ) இல்டுட்மிஷ்
இ) ஹுமாயூன் ஈ) ஜஹாங்கீர்

75. 'பண்டித சோழன்' என்றழைக்கப்பட்ட சோழ அரசர்
அ) இராஜராஜசோழன்
ஆ) இராஜேந்திர சோழன்
இ) முதலாம் குலோத்துங்க சோழன்
ஈ) இரண்டாம் குலோத்துங்க சோழன்

76. முற்காலத்தில் வட இந்தியாவில் இருந்த 'மகாஜனபதங்கள்' என்பது எத்தனை அரசுகளைக் குறிக்கிறது?
அ) 10 ஆ) 12
இ) 14 ஈ) 16

77. விலை மிகுந்த 'பாடுக்' தேக்கினம் அதிக அளவில் எங்குள்ளது?
அ) இலட்சத் தீவுகள் ஆ) அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள்
இ) மத்தியப் பிரதேசம் ஈ) அஸ்ஸாம்

78. இரு தலைநகர்களைக் கொண்ட ஒரே இந்திய மாநிலம்
அ) ஜம்மு காஷ்மீர் ஆ) ஹரியானா
இ) பஞ்சாப் ஈ) சட்டீஸ்கர்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

79. இந்தியாவில் தனி நபர் வருமானம் (Per capita Income) அதிகமுள்ள மாநிலம்
அ) ஹரியானா ஆ) பஞ்சாப்
இ) கர்நாடகா ஈ) மகாராஷ்டிரா

80. ஒரிஸ்ஸாவில் ராக்கெட் ஏவு மையம் (Rocket Launching Station) எங்குள்ளது?
அ) பந்திப்பூர் ஆ) சோன்பூர்
இ) ஜெகத்சிங்பூர் ஈ) சந்திப்பூர்

81. இந்தியாவுக்கென ஒரு தனி அரசியலமைப்புச் சட்டம் என்னும் கருத்தாக்கத்தை முதன் முதலில் வைத்தவர்
அ) டாக்டர் அம்பேத்கர் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) எம்.என்.ராய் ஈ) மகாத்மா காந்தி

82. பொருளாதார அவசர நிலைப் பிரகடனம் எந்த அரசியல் சட்டப் பிரிவின்படி செயல்படுத்தப்படுகிறது?
அ) Art 352 ஆ) Art 356
இ) Art 360 ஈ) Art 364

83. இந்தியாவில் முதல் குடியரசுத் தலைவர் தேர்தல் எந்த ஆண்டு நடைபெற்றது?
அ) 1947 ஆ) 1948
இ) 1950 ஈ) 1952

84. குடியரசுத் தலைவர் தனது ராஜினாமா கடிதத்தை யாரிடம் வழங்கவேண்டும்?
அ) உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி
ஆ) டெல்லி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி
இ) துணை குடியரசுத் தலைவர்
ஈ) நாடாளுமன்ற சபாநாயகர்

85. ரிசர்வ் வங்கியின் கவர்னர் பதவி வகித்த ஒரே இந்தியப் பிரதமர்
அ) டாக்டர் மன்மோகன்சிங் ஆ) ஐ.கே.குஜ்ரால்
இ) வி.பி.சிங். ஈ) மொரார்ஜி தேசாய்

86. இந்தியாவின் முதல் உயர்நீதிமன்றம் எங்கு செயல்படத் துவங்கியது?
அ) மதராஸ் ஆ) பம்பாய்
இ) கல்கத்தா ஈ) டெல்லி

87. தமிழகத்தின் 10வது மாநகராட்சி
அ) திருப்பூர் ஆ) ஈரோடு
இ) வேலூர் ஈ) தூத்துக்குடி

88. நமது மனித உடலில் செல்லுலோஸ் சிதையும்போது உருவாவது எது?
அ) அசிட்டிலீன் ஆ) எத்திலீன்
இ) மீத்தேன் ஈ) ஈத்தேன்

89. 'தி சீக்ரெட் வே' என்னும் நாவலைத் தழுவி எழுதப்பட்ட நூல்
அ) மனோன்மணியம் ஆ) இரட்டை மனிதன்
இ) சீறாப் புராணம் ஈ) ஆசிய ஜோதி

90. தமிழகத்தின் மாநில விலங்கு
அ) புலி ஆ) சிங்கம்
இ) நீலகிரி வரையாடு ஈ) யானை

91. இந்தியாவில் தேசிய வானிலை மையம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1850 ஆ) 1875
இ) 1890 ஈ) 1920

92. ஆஸ்பிரின் என்பது
அ) சாலிசிலிக் அமிலம் ஆ) அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்
இ) அசிட்டைல் சாலிசிலேட் ஈ) எத்தில் சாலிசிலேட்

93. டென்னிஸ் டிட்டோ என்பவர்
அ) செவ்வாய் கிரகத்திற்கு பயணம் செய்த முதல் மனிதன்
ஆ) விண்வெளிக்கு சென்ற முதல் உல்லாசப் பயணி
இ) விண்வெளிக்குச் சென்ற முதல் அமெரிக்கப் பயணி
ஈ) யுரேனஸ் கிரகத்தைக் கண்டறிந்தவர்

94. அமர்த்தியா சென் எந்த துறைக்காக நோபல் பரிசு வென்றார்?
அ) இலக்கியம் ஆ) வேதியியல்
இ) அமைதி ஈ) பொருளாதாரம்

95. சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் ஒழிக்கப்பட்ட ஆண்டு
அ) 1809 ஆ) 1819
இ) 1829 ஈ) 1839

96. 'செம்புலப் பெயல் நீர் போலஅன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என்னும் வரிகள் இடம் பெற்ற இலக்கியம்
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) அகநானூறு ஈ) பதிற்றுப் பத்து

97. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்
அ) சிங்கப்பூர் ஆ) சென்னை
இ) கோலாலம்பூர் ஈ) கோயம்புத்தூர்

98. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் உள்ள மாவட்டம்
அ) திருவள்ளூர் ஆ) காஞ்சிபுரம்
இ) இராமநாதபுரம் ஈ) திருநெல்வேலி

99. தமிழகத்தின் முதல் துணை முதலமைச்சர்
அ) பக்தவச்சலம் ஆ) நெடுஞ்செழியன்
இ) இராஜாஜி ஈ) மு.க.ஸ்டாலின்

100. 'தேசிய விவசாயிகள் தினம்' என்று அனுசரிக்கப்படுகிறது?
அ) டிசம்பர் 23 ஆ) மே 31
இ) ஜூன் 21 ஈ) அக்டோபர் 30

## விடைகள் :

1.இ), 2.ஆ), 3.அ), 4.ஆ), 5.ஈ), 6.அ), 7.இ), 8.ஈ), 9.ஆ), 10.அ), 11.ஈ), 12.ஆ), 13.இ), 14.ஈ), 15.ஈ), 16.அ), 17.அ), 18.ஆ), 19.இ), 20.ஈ), 21.ஆ), 22.அ), 23.ஆ), 24.அ), 25.இ), 26.ஈ), 27.ஈ), 28.இ), 29.அ), 30.ஆ), 31.இ), 32.ஈ), 33.இ), 34.இ), 35.ஆ), 36.ஈ), 37.அ), 38.ஆ), 39.இ), 40.இ), 41.அ), 42.ஆ), 43.இ), 44.ஆ), 45.ஈ), 46.இ), 47.அ), 48.இ), 49.அ), 50.இ), 51.ஆ), 52.இ), 53.ஈ), 54.அ), 55.ஆ), 56.இ), 57.ஆ), 58.ஈ), 59.அ), 60.இ), 61.ஆ), 62.இ), 63.ஈ), 64.இ), 65.இ), 66.அ), 67.ஆ), 68.இ), 69.ஆ), 70.இ), 71.அ), 72.இ), 73.அ), 74.அ), 75.ஆ), 76.ஈ), 77.ஆ), 78.அ), 79.ஆ), 80.ஈ), 81.இ), 82.இ), 83.ஈ), 84.இ), 85.அ), 86.இ), 87.ஈ), 88.இ), 89.அ), 90.இ), 91.ஆ), 92.ஆ), 93.ஆ), 94.ஈ), 95.இ), 96.ஆ), 97.இ), 98.ஆ), 99.ஈ), 100.அ).

www.LatestWalkin.com